## 18. STREET LIGHTS

**18.6 1999–2000–ஆம் ஆண்டில் தெருவிளக்கு, மின்கம்பங்கள் அமைத்தல், மின்விளக்குகள் பொருத்துதல் – சராசரி செலவினத் தொகையை நிர்ணயம் செய்தல்**

---

ஊரக வளர்ச்சி ( தி 3) துறை

அரசாணை ( நிலை) எண். 275 நாள் : 28.12.1999

படிக்க :

1. அரசாணை (நிலை) எண் 244 ஊரக வளர்ச்சி (தி3) துறை நாள் 18.11.98.
2. தமிழ்நாடு மின்சார வாரிய முதன்மைப் பொறியாளரின் (திட்டம்) கடித எண் SE/RE&I (D)/RE II / F. St. Lt. VP/D.No.717/99.நாள் 22.8.99.

ஆணை

பார்வை 1ல் படிக்கப்பட்ட அரசாணையில், ஏனையவைகளோடு 1998–99–ம் ஆண்டிற்கு மாநிலத்திலுள்ள ஊரக மற்றும் நகர அமைப்புகளில் ஒரு தெரு விளக்கு அமைக்க ஆகும், சராசரி செலவு ரூ 4900/– என நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும், ஏற்கனவே உள்ள தெரு விளக்குக் கம்பங்களில் உள்ள மின்விளக்குகளை அகற்றிவிட்டு சோடியம்/பாதரசம் ஆவி விளக்குகளாக மாறுதல் செய்து பொருத்தும் பணிக்கு ஒரு தெரு விளக்கிற்கு ரூ.550/– என்ற வீதத்தில் கூலியாக நிர்ணயக்கலாம் எனவும், ஆனால் அவ்வாறு மாற்றும்பொழுது மின்விளக்கு பொருத்திகளை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் மின்சார வாரியத்திற்கு வழங்கவேண்டும் எனவும் ஆணையிடப்பட்டது.

2. படிக்கப்பட்ட 2–ல் காணும் கடிதத்தில், மின்சார வாரிய முதன்மைப் பொறியாளர் 1999–2000–ம் ஆண்டிற்கு தெருவிளக்குகள் அமைப்பது தொடர்பாக கீழ்கண்டவாறு ஆணை வெளியிடுமாறு அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

1. 1998–99 மற்றும் 1999–2000–ம் ஆண்டுகளுக்கான விலைவாசி ஏற்றத்தினை கருத்தில் கொண்டு பார்க்கும்போது 1999–2000–ம் ஆண்டிற்கு ஒரு தெரு விளக்கு அமைக்க ஆகும் தொகை ரூ.7800/– என நிர்ணயம் செய்யலாம்.
2. குழல்விளக்குகளை சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றம் செய்வதற்கு ரூ,550/– என்ற தொகையினை நிர்ணயம் செய்யலாம், ஆனால் சோடியம் ஆவி விளக்கு மற்றும் இதற்கான பொருத்திகளை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள்தான் வழங்க வேண்டும்.
3. 1999–2000–ம் ஆண்டு இறுதியில் தெருவிளக்குகள் அமைக்கப்போகும் எண்ணிக்கையின் அடிப்படையில் ஏற்படும் இறுதிச்செலவினை கணக்கிட்டு சராசரி செலவினமாக நிர்ணயிக்கப்படும் தொகைக்கு கூடுதலாக செலவிடப்படும் தொகையினை அரசு மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டும்.
4. வனப்பிரதேசங்களில் மின்விளக்கு அமைக்க வேண்டுமெனில் வனத்துறையின் அனுமதியினை ஊரக வளர்ச்சி துறை அலுவலர்காளல் பெறப்பட்டு உரிய அனுமதியை தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் வழங்கியபின்புதான் நடவடிக்கை எடுக்கப்படும்.

3. மேற்காணும் தமிழ்நாடு மின்சாரவாரிய முதன்மைப்பொறியாளரின் அறிக்கையினை நன்கு பரிசீலித்த பின்னர் அரசு 1999–2000–ம் ஆண்டிற்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் புதிய தெரு விளக்குகள் அமைத்தல் மற்றும் சோடியம் / பாதரசம் ஆவி விளக்குகளாக மாற்றம் செய்தல் தொடர்பாக கீழ்கண்டவாறு முடிவெடுத்து ஆணை பிறப்பிக்கின்றது.

1. 1999–2000–ம் ஆண்டிற்கு ஒரு தெரு விளக்கு அமைக்க ஆகும் சராசரி செலவின தொகை ரூ.7800/– என நிர்ணயம் செய்யப்படுகிறது.
2. ஏற்கனவே உள்ள குழல்விளக்குகளை சோடியம் / பாதரசம் ஆவி விளக்குகளாக மாற்றம் செய்ய 1999–2000–ம் ஆண்டிற்கு ரூ,550/– என்ற நிர்ணையம் செய்யப்படுகிறது. ஆனால் சோடியம் / பாதரசம் ஆவி விளக்கு மற்றும் இதற்கான பொருத்திகளை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் வழங்க வேண்டும்.
3. 1999–2000–ம் ஆண்டு இறுதியில் தெருவிளக்குகள் அமைக்கப்போகும் எண்ணிக்கை அடிப்படையில் ஏற்படும் இறுதிச்செலவினை கணக்கிட்டு சராசரி செலவினமாக மேலே இனம் 1–ல் நிர்ணையித்த தொகைக்கு கூடுதலாக செலவிடப்படும் தொகையினை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டும்.

4. வனப்பிரதேசங்களில் மின்விளக்கு அமைக்க வேண்டுமெனில் ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள் வனத்துறையிடம் உரிய அனுமதியை பெற்று தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் வழங்க வேண்டும்.

5. கிராம ஊராட்சிகள் / ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் தெரு விளக்குகள் இல்லாத பகுதிகளுக்கு புதிய தெரு விளக்குகள் அமைக்க வேண்டுமெனில் சம்மந்தப்பட்ட ஊராட்சிகள் / ஊராட்சி ஒன்றியங்கள் / மாவட்ட ஊராட்சிகள் தங்களது செந்த நிதியிலிருந்து அல்லது தெரு விளக்குகள் அமைக்க அனுமதிக்கப்பட்ட நிதியிலிருந்து மட்டுமே இதனை செயல்படுத்த வேண்டும்.

4. இவ்வானை நிதித்துறையின் அ.சா.கு.எண் 3329/எப்.எஸ்/99, நாள் 5.9.99 மற்றும் எரிசக்தித் துறையின் அ.சா.கு. எண் 8460/சி3/99–1 நாள் 10.9.99–ன் மூலம் ஒப்புதல் பெறப்பட்டு வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்